27th September 1956]

SRI K. T. RAJU : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் கூறியது எனக்கு சரியாக விளங்கவில்லை. விசைத் தறியைப் புகுத்துவதை அவர் ஒத்துக்கொள்கிறாரா அல்லது ஒத்துக்கொள்ளவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்பற்றி அவர் தெளிவாக ஒன்றுமே சொல்லவில்லை. அரசாங்கத்தினுடைய கொள்கை இது சம்பந்தமாக என்ன என்பதைத்தெளிவாக தெரியப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். விசைத் தறியைப் புகுத்துவதை ஒப்புக்கொள்ளப் போகிறார்களா அல்லது அதை கைவிடப்போகிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விசைத்தறி விசைத்தறி என்று மந்திரம் சொல்லிக்கொண்டிருக்கவேண்டாம். கைத் தறிக்காரர்களுக்கு எந்த விதமான பாதகமும் ஏற்படாதவாறு இந்த அரசாங்கம் பார்த்துக்கொள்ளும் என்றும் அதற்கு வேண்டிய நடவடிக் கையும் எடுத்துக்கொள்ளும் என்றுதான் சொல்லுகிறேன். விசைத்தறி விசைத்தறி என்று அடிக்கடி மந்திரம் சொல்லிக் கொண்டிருக்கவேண்டாம் என்றுதான் சொல்லுகிறேன்.

SRI N. K. PALANISAMY : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் வாயளவில்தான் பேசிக்கொண்டிருக்கிறார்களே தவிர கைத்தறிக்காரர்களுக்குச் சாதகமாக எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. உண்மையான நோக்கம் அவருக்கு கைத்தறிக்காரர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்றிருந்தால் இப் பொழுது 10 அல்லது 11 மாதமாக ரிபேட் கொடுக்கப்படாமல் தேங்கிக் கிடக்கிறது. அதைச் சொசைட்டிகள் மூலமாகக் கொடுக்க நடவடிக்கை எடுப் பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் வாயளவில் பேசாமல் அங்கு கைத்தறிக்காரர்களுடைய நன்மைக்காக வேலை செய்தால் நன்றாக இருக்கும் என்பதை மட்டும் சொல்லிக் கொள்ளுகிறேன்.

SRI P. RAMAMURTHI : I am not withdrawing my resolution. The Minister's reply has been thoroughly unsatisfactory and absolutely non-committal. He simply said that the Government would do everything in the interest of handloom weavers, when specific problems had been posed. So I want to exercise my right of reply.

MR. SPEAKER : The discussion will be continued on the next non-official day. The House will now adjourn and meet again at 9 a.m. to-morrow.

The House then adjourned. 1-07 p.m.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

159. *Notification issued with Memorandum No.* 44185-*M*/55-3, *dated* 16*th June* 1956, *regarding exemption of certain kinds of precious stones from the tax payable under section* 3 (2) *of the Madras General Sales Tax Act*, 1939.

160. *Notification issued with G.O. No.* 2454, *Revenue, dated* 18*th June* 1956, *regarding amendment with reference to the powers of assessing authority.*